பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 30 ஞாயிற்றுக்கிழமை 13.02.2022 கதிர் 326

## உயிர்கள் வாழத் தகுதியான புதிய கோள் கண்டுபிடிப்பு!

உயிர்கள் வாழ கூடிய வேறு கிரகங்கள், கோள்கள் இருக்கின்றனவா என்று விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் உயிர்கள் வாழ தகுதியான ஒரு கோள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

லண்டன் பல்கலைக்கழக ☞2

# மற்றொரு காட்டமான பிரேரணைக்கு ஜெனிவாவில் பிரிட்டன் தயாராகிறது!

## சமாளிக்கும் முயற்சியாக அமைச்சர் பீரிஸ் மேற்குலக நாடுகளுக்குச் செல்லத் திட்டம்

கொழும்பு, பெப்ரவரி 13

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலின் கூட்டத்தொடரில் மற்றுமொரு கடுமையான பிரேரணையைக் கொண்டு வருவதற்கு பிரித்தானியா தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பிரேரணையை இறுதிக்கட்ட போரில் இடம்பெற்றவை எனக் கூறப்படுகின்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச் சாட்டுகளுக்கான பொறுப்புக்கூறலின் தாமத நிலை மற்றும் அண்மைய கால உரிமைகள் மீறல்கள் பற்றிய விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என கொழும்பு இராஜதந்திர மட்டத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. ☞2

## கைதிகள் விடயத்தில் ஜெனிவா செல்வாக்குச் செலுத்த முடியாது!

### அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறுகின்றார்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில் அல்லது ஏனைய சர்வதேச சக்திகள் கைதிகள் தொடர்பான தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் இடமளிக்காது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ☞2

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான பிரதான விசாரணை அதிகாரி தப்பி ஓட்டம்!

### சொல்லிக் கொள்ளாமல் அமெரிக்கா பறந்தார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் பிரதான விசாரணை அதிகாரி ஒருவர் நாட்டை விட்டுதப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் உதவி பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்ற இந்த அதிகாரி அமெரிக்காவிற்கு தப்பிச் சென்றுள்ளார் என உளவுத்துறை வட்டாரங்கள் தேசிய பாதுகாப்பு சபையில் தெரிவித்துள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது பெயரிடப்பட்ட சாரா ஜஸ்மின் என்ற புலஸ்தினி மகேந்திரன் மன்னாரில் இருந்து படகில் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார் என ஈஸ்டர் ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவுக்கு அறிவித்தவர் இந்த அதிகாரிதான்.

சாய்ந்தமருது குண்டுவெடிப்பில் இருந்து ☞2

## சர்வதேசத்திடம் நீதி வேண்டுவது காட்டிக் கொடுக்கும் செயலல்ல!

### அருட் தந்தை சிறில் காமினி அடிகளார் கூறுகின்றார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேசத்தின் ஆதரவைப் பெறுவதானது, நாட்டைக் காட்டிக் கொடுக்கும் முயற்சி அல்ல. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்காகவே சர்வதேசத்தின் ஆதரவை பெறுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம். எமது இந்த போராட்டத்திற்கு கத்தோலிக்க திருச் சபையின் தலைவரான பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகையும் தனது பூரண ஆதரவை ☞2



## ஐ.தே.கவை மீளக் கட்டியெழுப்ப ரணில் பகீரதப் பிரயத்தனமாம்!

ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் கட்டியெழுப்புவதற்காகக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க கடும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார் என சிறிகொத்தாவின் தகவல்கள் கூறுகின்றன.

இதற்காக ரணில் விக்கிரமசிங்க கடந்த 8 ஆம் மற்றும் 9 ஆம் திகதிகளில் சிறிகொத்தாவில் பல கூட்டங்களை நடத்தியுள்ளாரெனவும் தெரியவருகிறது. ☞2



மேஜர் ஜெனரல் சாகி கல்லகே

## ஜெனிவாவில் காத்திருக்கிறது பேராபத்து எச்சரிக்கிறார் முன்னாள் படைத் தளபதி!

இலங்கை தொடர்பில் ஜெனிவா விவகாரம் தீவிரமானது எனவும் நாடு பெரும் ஆபத்தில் உள்ளதாகவும் இறுதிப் போரில் முக்கிய பங்காற்றிய இராணுவத் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் சாகி கல்லகே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாம் பயங்கரவாதிகளைத் தோற்கடித்து 30 வருட இனப்போரை வென்றோமென்று, எமக்கு எதிரான போர்க் குற்றச் சாட்டுக்களையும் நாம் ☞2

## அரிய வெள்ளை நிறக் கழுகை வளர்த்த புத்தளம்வாசி கைது!



புத்தளம் பாலாவி 2 ஆம் கட்டைப் பகுதியில் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்ட அரிய வகை வெள்ளை நிற கழுகுடன் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைக்க பெற்ற இரகசியத் தகவலுக்கமைய இன்று காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது அரிய வகை வெள்ளை நிற கழுகு (WHITE BELLIED SEA EAGLE - HALIEETUS LEUCOGWTER) ☞2




## 50 அடி பள்ளத்தில் விழுந்தது லொறி

### ஒருவர் மரணம்



வத்துகாமம் - எல்கடுவ வீதியில் லொறி ஒன்று சுமார் 50 அடி பள்ளத்தில் விழுந்து ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## சர்வதேசத்திடம் நீதி வேண்டுவது ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கவுள்ளார் என கொழும்பு மறை மாவட்ட அருட் தந்தை சிறில் காமினி அடிகளார் தெரிவித்தார்.

இலங்கை கத்தோலிக்க திருச்சபை எதிர்க்கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலின்படி செயற்படுவதாகக் கூறப்படுவதை முழுமையாக மறுப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பு மறை மாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து பரிசுத்த பாப்பரசருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

இதற்குப் பதில் கடிதம் அனுப்பியிருந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகை இவ்விடயம் தொடர்பில் தாம் முழுமையான ஆதரவை வழங்குவார் என அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் என்று அருட் தந்தை சிறில் காமினி குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று மூன்று ஆண்டுகள் ஆகப்போகின்றன. இருப்பினும் இதுவரை சூத்திரதாரி யார் எனக் கண்டறியப்படவில்லை. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் குறித்து கத்தோலிக்க திருச்சபை அதிருப்தியில் உள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை கத்தோலிக்க திருச்சபை விரும்புகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மாபெரும் சூழ்ச்சி நடைபெற்றுள்ளதாக அப்போதைய சட்ட மா அதிபர் தப்புள டி லிவேரா தெரிவித்திருந்தார். தப்புள டி லிவேரா வெளியிட்ட இந்த கருத்து தொடர்பில் குற்றவியல் விசாரணை திணைக்களம் அவரிடம் விசாரணை நடத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்துக்கு அரசாங்கம் நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு தவறினால், சர்வதேச நீதி மன்றத்தை நாடுவதற்கு இலங்கை கத்தோலிக்க திருச்சபை தயாராகவே உள்ளது. எமது இந்த நீதிக்கான போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகை தனது பூரண ஆதரவை வழங்குதாக கூறியிருந்தார்.

மேலும், இவ்விடயம் குறித்து சர்வதேச சமூகத்துக்கும் வெளிநாட்டில் வாழும் இலங்கை கத்தோலிக்கர்களுக்கும் விளக்கமளிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சர்வேதசத்தின் ஆதரவைப் பெறுவதென்பது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் முயற்சியாக கருதாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கருதுங்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். குற்றம் செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். யார் ஆட்சியில் இருந்தாலும், நீதிக்காக தொடர்ந்து போராடுவோம் என்றார்.

## ஜெனிவாவில் காத்தி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைரியமாக எதிர்கொள்ள வேண்டும்.

ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கைக்கு எதிராகப் பல வருடங்களாக போர்க்குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றது. போர் முடிவடைந்து பதின்மூன்று வருடங்கள். எனினும், இவ்வாறான குற்றச்சாட்டுக்களை இலங்கை சரியாக கையாளவில்லை. இந்த குற்றச்சாட்டுகளை நாம் போரில் எதிர்கொண்டமைபோல் ஆக்ரோஷமாக எதிர்கொள்ள வேண்டும்.

இவ்வாறான போர்க் குற்றச் சாட்டுக்களை உரிய முறையில் நிராகரிக்காவிடின் எதிர்காலத்தில் நாட்டுக்கு ஆபத்தான நிலை உருவாகலாம். யுத்தம் முடிவடைந்து பல வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் வெளி சக்திகள் எமது நாட்டுக்கு அச்சுறுத்தலாகவே இருக்கின்றன. நாட்டில் அரசியல் அதிகாரம் செலுத்தும் தலைவர்கள் இந்த நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்திலுள்ள சில கட்சிகள் போர்க்குற்றச்சாட்டுகளில் வெளிநாட்டின் தலையீட்டை கோருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளார். ஜெனிவா மனித உரிமைகள் அமைப்பினால் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தை எதிர்க்காததற்கு இந்த நாடு எதிர்காலத்தில் பாரிய விலை கொடுக்க வேண்டியிருக்கும்.

இம்முறை ஜெனிவா மனித உரிமைகள் அமர்வுகள் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளன. கடந்த ஆண்டுகளிலும் இந்த போர்க்குற்ற குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை அரசு பதிலளிக்கவில்லை. ஆனால் இம்முறை உரிய நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். இந்த சூழ்நிலையை நாங்கள் புறக்கணிக்க முடியாது.

போருக்குப் பின்னரான தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பிலான பல்வேறு அறிக்கைகளுக்கு மாறாக இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஓய்வுபெற்ற மற்றும் பணியில் இருக்கும் இராணுவ வீரர்கள் மீது எந்தவிதமான நடைமுறையும் இன்றி, செவிவழிச் சான்றுகளின் அடிப்படையில் மட்டும் கொடூரமான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் சரியான வழிமுறையை நடைமுறைப் படுத்துவதில் தற்போதைய அரசியல் தலைமை பாராமுகமாக இருப்பதாகவே தெரிகிறது. இந்த நிலையை போக்க அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 50 அடி பள்ளத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்துக்குள்ளாகி உள்ளது.

நேற்று இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் 32 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார். சாரதி காயமடைந்துள்ளளார். அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை வத்துகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## அரிய வெள்ளை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனத்தைச் சார்ந்தது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த அரிய வகை வெள்ளை நிறக் கழுகு விற்பனை செய்யப்படுவதற்காக வளர்க்கப்பட்டு வந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புத்தளம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக நீதிமன்ற உத்தரவின் பேரில் புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட உள்ளார்.

மேலும் அரிய வகை வெள்ளை நிற கழுகும் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

## ஐ.தே.கவை மீளக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் இணை அமைப்புகளான இளைஞர் முன்னணி, லக் வனிதா முன்னணி உட்பட கட்சியின் அமைப்புகளை செயற்பட வைத்து, கட்சியை வலுப்படுத்தும் வேலைத் திட்டத்தை முன்னெடுப்பது குறித்து இந்த கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து தேர்தல் தொகுதிகளுக்கும் 150 உறுப்பினர்களை கொண்டதாக இளைஞர் முன்னணியை உருவாக்கவும் அதற்காக இளைஞர், யுவதிகளை இணைத்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர கடந்த 7 ஆம் திகதி முதல் ஒரு வார காலத்தில் தொகுதி அமைப்பாளர்களுக்கு வெற்றிடம் நிலவும் இடங்களுக்கு கிடைத்துள்ள விண்ணப்பங்கள் ஆராயப்பட்டன. அவற்றைப் பரிந்துரைக்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.

கடந்த வாரம் நடைபெற்ற இந்த கூட்டங்களில் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார உள்ளிட்டோர் கலந்துக்கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உப தலைவர் ரவி கருணாநாயக்க, முன்னாள் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க ஆகியோர் இந்த கூட்டங்களில் கலந்துக்கொள்ளவில்லை.

இவர்கள் கட்சியின் தலைவருடன் கொள்கை ரீதியான முரண்பாட்டு மோதலில் இருந்து வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

## கைதிகள் விடயத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பலாங்கொடையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், நாட்டில் கைதிகளை விடுவிக்கும் போது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிக்குல பிரச்சினை ஏற்படாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர் -

“ஜனாதிபதி தனது கொள்கை விளக்க அறிக்கையில் கைதிகளுக்கு புனர்வாழ்வு வழங்குவார் என உறுதியளித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் நெரிசலைக் குறைக்கவும், விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள நீண்டகாலக் கைதிகளை விடுவிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கைதிகளை சுதந்திரமாக அவதானித்து ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவார் என்றார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தமையிட்டு பல நாடுகள் சிறிலங்காவை எதிர்க்கின்றன எனவும், அவர்கள் அரசுக்கு எதிராக எப்போதும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர் எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

## உயிர்த்த ஞாயிறுத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாரா தப்பிச் சென்றமையை தனது உளவாளிகள் இருவர் நேரில் பார்த்தனர் எனக் கூறி உளவுத்துறையினரின் சாட்சியத்தை அந்த அதிகாரி ஆணைக்குழுவில் முன்வைத்தார்.

இந்த அதிகாரிதான் சாரா ஜாஸ்மின் பொலிஸ் இன்ஸ்பெக்டரால் அழைத்துச் செல்லப்பட்டார் எனத் தெரிவித்தார். இதன்படி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் அபுபக்கரை அந்த அதிகாரி கைது செய்தார்.

இரண்டு ஆண்டுகளாகத் தடுப்புக் காவலில் இருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் அபுபக்கர், அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கப்பட்டமையால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றமை தற்போது தெரியவந்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் நேரில் கண்ட சாட்சிகளின் கூற்றுப்படி, சம்பவம் நடந்த போது இரண்டு உளவாளிகளும் பல மாதங்களாக வவுனியா மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே இருந்துள்ளனர். பின்னர் இரு உளவாளிகளின் விசாரணையின் போது உயிர்த்த ஞாயிறு விசாரணை அதிகாரியின் வேண்டுகோளின் பேரில் பொய்யான சாட்சியங்களை வழங்கினோம் என அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இதன்படி, உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய பொலிஸ் பரிசோதகர் அபுபக்கர் வீண் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்குமாறு பொலிஸ் திணைக்களம் சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையில், உயிரித்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் அதிகாரி திணைக்களத்திற்கு அறிவிக்காமல் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

## மற்றொரு காட்டமான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்தானியா கொண்டு வரவுள்ள இந்த புதிய பிரேரணைக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பலவும் மேற்குலக நாடுகள் சிலவும் ஆதரவை தெரிவித்துள்ளன எனவும் அந்தத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் ஜெனிவாவில் ஏற்பட கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் பல்வேறு வியூகங்களை வகுத்து வருகின்றது.

இதனடிப்படையில் ஜெனிவா அமர்விற்கு முன்னர் முக்கிய சில ஐரோப்பிய நாடுகளுடன் கலந்துரையாடலை முன்னெடுக்க வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தீர்மானித்துள்ளார். இந்த கலந்துரையாடல்களுக்கு சில நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன என வெளிவிவகார அமைச்சின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

அண்மைய இந்திய விஜயத்தினை போன்று குறிப்பிட்ட சில ஐரோப்பிய நாடுகளுக்கு ஜெனிவா அமர்வுக்கு முன்னர் விஜயம் செய்தல் அல்லது மார்ச் மாதம் 3 ஆம் திகதி இலங்கை குறித்த அறிக்கை சமர்பிக்கப்படுவதற்கு முன்னர் குறித்த நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளல் போன்ற வழிமுறைகள் குறித்து இலங்கையின் இராஜதந்திர பணிக் குழாம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அதே சமயன் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக ஜெனிவா செல்லவுள்ளார்.

மார்ச் 3 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை குறித்த எழுத்து மூலமான அறிக்கை சமர்பிக்கப்பட உள்ளது. இந்த அறிக்கையானது இலங்கைக்கு சவால் மிக்கதாகவே அமையும் எனவும் கருதப்படுகின்றது.

## உயிர்கள் வாழத் தகுதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரியின் பேராசிரியர் ஜேபரிகி தலைமையிலான ஆய்வுக் குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதில் கூறி இருப்பதாவது:-

ஒயிட் டார்ப் என்று அழைக்கப்படும் நட்சத்திரத்தை உயிர்கள் வாழும் சூழ்நிலை கொண்டுள்ள கோள் சுற்றி வருவது கண்டு பிடிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இந்த கோள் நட்சத்திரத்தில் உயிர்கள் வாழ கூடிய மண்டலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. அங்கு உயிர்கள் வாழ முடியாத அளவுக்கு மிகவும் குளிரோ அல்லது அதிக வெப்பமோ இருக்காது.

பூமியில் இருந்து 117 ஒளி ஆண்டு தொலைவில் இருக்கும் இந்த கோளுக்கும் அதன் நட்சத்திரத்துக்கும் இருக்கும் தூரம், பூமிக்கும் சூரியனுக்கும் இடையே இருக்கும் தொலைவை விட 60 மடங்கு குறைவாகும்.

உயிர்கள் வாழக்கூடிய மண்டலம் என்பது ஒரு நட்சத்திரத்தில் இருந்து குறிப்பிட்ட தொலைவில் அமைந்துள்ள பகுதியாகும். இந்த பகுதியில் அமைந்துள்ள கோள்கள் திரவ நீர் இருக்க வாய்ப்புள்ள சூழ்நிலையை கொண்டிருக்கும். எனவே உயிர்கள் வாழ இது உதவும்.

நட்சத்திரத்துக்கு மிகவும் அருகில் ஒரு கோள் இருந்தால் அது மிகவும் சூடாக இருக்கும். அதிக தொலைவில் இருந்தால் மிக குளிராக இருக்கும். தற்போது கண்டு பிடிக்கப்பட்டு உள்ள கோள் இருக்கும் மண்டலம் உயிர்கள் வாழ மிகச் சரியாக இருக்கும் பகுதியில் இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பேராசிரியர் ஜேபரிகி கூறும்போது, இந்தக் கணிப்பு வானியலாளர்களுக்கு முற்றிலும் புதியது என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சர்வதேச நெருக்குவாரம்

பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கை அரசுக்கு அடுத்து வரும் வாரங்களும், மாதமும் இன்னொரு தளத்தில் மிக முக்கியமானவையாக அமையப் போகின்றன.

ஒன்று – ஜெனிவாவில் நடைபெறப் போகின்ற ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 49 ஆவது கூட்டத்தொடர்.

மற்றது – பிரஸல்ஸிலும் ஸ்டார்ஸ்பேர்க்கிலும் நடைபெறப்போகும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற அமர்வுகள்.

இதில் இம்மாத பிற்பகுதியில் ஜெனிவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர் குறித்து இப்போது அதிகம் பேசப்பட்டாலும், அதைத் தொடர்ந்து நடைபெறக்கூடிய ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற அமர்வும் கூட முக்கியத்துவம் பெறுகின்றது.

ஜெனிவா அமர்வில் மேற்கு நாடுகளின் சீற்றம் தனக்கு எதிராகக் கடுமையாக இருக்கும் என்பதை இப்போது முன்கூட்டியே உணர்ந்து உள்ள கொழும்பு ஆட்சிபீடம், இம்முறை மேற்கு நாடுகளுடன் முட்டி மோதும் போக்கை அடியோடு கைவிட்டு, இயைந்து போகும் பாணியைப் பின்பற்ற தீர்மானித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜெனிவா அழுத்தத்தைச் சமாளித்து, காலத்தை இழுத்தடிக்க முன்னைய நல்லாட்சி அரசு அந்தத் தந்திரோபாயத்தைத் தான் கையாண்டது. அதே வழிமுறையைப் பின்பற்றுவது குறித்து கொழும்பு திரும்பவும் கரிசனை கொண்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால், இது விடயத்தில் முன்னைய நல்லாட்சி அரசின் அந்த அணுகுமுறையை மிக மோசமாகவும், காட்டமாகவும், பகிரங்கமாகவும் விமர்சித்துவிட்டு, இப்போது அதே பாணியைத் தாங்கள் பின்பற்றுவது எப்படி என்று கோட்டாபய அரசின் உயர்பீடம் சிந்திப்பதாகத் தெரிகின்றது.

மார்ச் 3ஆம் திகதி ஜெனிவாவில் இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அவதானிப்பு அறிக்கை மீது விவாதம் நடக்கும் போதும், கடும் முரண்பாடான நிலைமையை எடுக்காமல் ஒத்து ஊதினால், அடுத்த செப்டெம்பரில் நிலைமை முழுமையாக மீள்பரிசீலனை செய்யப்பட்டு, புதிய பிரேரணை வரும்போது, சேர்ந்து அனுசரணையாகச் செயற்பட்டு அதன் மூலம் மேலும் காலத்தை இழுத்துச் செல்லலாம் என்று கொழும்பு தந்திரோபாயம் வகுப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதே சமயம் மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சூழல் பாதுகாப்பு, நல்லாட்சி முறைமை ஆகியவற்றை நிபந்தனையாக முன்வைத்து ஜி.எஸ்.பி. வரிச்சலுகை என்ற வரிவிதிப்பற்ற ஏற்றுமதிக்கு இலங்கைக்கு வாய்ப்பளித்து, உதவி வரும் ஐரோப்பிய ஒன்றியம், மேற்படி விடயங்களில் இலங்கையின் செயற்போக்குக் குறித்து அதிருப்தி தெரிவித்து, கடந்த ஜுனில் கொழும்புக்கு எச்சரிக்கை முன்னறிவித்தல் கொடுத்திருந்தது.

ஐரோப்பிய ஒன்றியம் – இலங்கைக் கூட்டுக் குழுவின் கூட்டம் கடந்த எட்டாம் திகதி கொழும்பில் முடிவுற்ற பின்னணியில், இலங்கை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் மறுபரிசீலனை செய்து, ஒரு முடிவு எடுக்கும் கட்டத்தை நெருங்கி இருப்பதாக கூறப்படுகின்றது.

மனித உரிமை விவகாரங்களில் –குறிப்பாக பயங்கரவாதம் போன்ற மிருகத்தனமான சட்டங்களை மாற்றி அமைப்பதாக – கொழும்பு கொடுத்த வாக்குறுதிகளைஅது நிறைவேற்றாத பின்புலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடுமையான நடவடிக்கைகளை வரும் மாதத்தில் எதிர்கொள்ள கூடிய ஆபத்து ஏதுநிலைகள் தென்படுகின்றன. ஜி.எஸ்.பி. வரிச்சலுகை எனும் அந்நிய செலவாணி ஈட்டுவதற்கான ஏற்றுமதி வரிச்சலுகை என்ற உதவித் திட்டத்தைக் கூட அது இழக்க வேண்டி நேரலாம்.

சர்வதேச அரங்கில் இது கொழும்புக்கு போதாத காலம் என்றே தோன்றுகின்றது. தன்னுடைய பௌத்த – சிங்களப் பேரினவாதத் திமிர்த்தனத்துடனேயே சர்வதேச ஊடாட்டங்களையும் கோட்டா அரசு தொடர்ந்து மேற்கொள்ளுமானால், விபரீதமான நிலைமைகளை – விளைவுகளை – அது எதிர்கொள்ள வேண்டும் என்றே தோன்றுகின்றது.

# மறைந்த மங்கள சமரவீர மாதிரி எவரும் பெரும்பான்மை கட்சிகளில் இன்றில்லை!

## மனோ கணேசன் அஞ்சலி



மங்கள சமரவீர, முதலில் 1988களில் தென்னிலங்கையில் இடம்பெற்ற சிங்கள இளைஞர்களை கடத்தி சென்று கொல்லும் மனித உரிமை மீறல்களை எதிர்த்தார். பின்னர், 2006 முதல் 2012 வரை எமது மக்கள் மீது நடத்தப்பட்ட கொடூரமான மனித உரிமை மீறல்களையும் எதிர்த்த காரணத்தின் காரணமாகவே அவர் அன்றைய அரசில் இருந்து விலக்கப்பட்டார். சமீப காலத்தில் இந்நாட்டு முஸ்லிம் மக்களுக்கு எதிராக செய்யப்பட்ட, பலாத்கார ஜனாசா எரிப்பு உள்ளிட்ட இனவாத முன்னெடுப்புகளுக்கு எதிராகவும் செயற்பட்டார். மனித உரிமை மீறல்களில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடு காணாதவர் மங்கள..!

இந்த நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கட்சிகளிலேயே இப்படி யார் இன்று இருக்கிறார்கள்? ஆளும் தரப்பு பக்கமும் பார்க்கிறேன். எதிர்த்தரப்பு பக்கமும் பார்க்கிறேன். தலையை திருப்பி, திருப்பி பார்க்கிறேன். யாரும் இல்லையே? என மறைந்த அமரர் மங்கள சமரவீர மீதான அனுதாப பிரேரணை மீது நாடாளுன்றத்தில் சிங்கள மொழியில் உரையாற்றிய தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோகணேசன் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

மங்கள சமரவீர பிறந்ததும், இறந்ததும் தனது காலத்துக்கு முன்னர் ஆகும். அவரிடம் நான் பல பாடங்களைப் படித்துள்ளேன். அந்த பாடங்கள் எனக்கு மட்டுமல்ல, முழு நாட்டுக்கும் உரித்தானவை. அவற்றை இங்கே கூறி அவருக்கு என் அஞ்சலிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலில் ஒன்றை சொல்ல வேண்டும். அவர் 1988 களில் தென்னிலங்கையில் இடம்பெற்ற சிங்கள இளைஞர்களை கடத்தி சென்று கொல்லும் மனித உரிமை மீறல்களை எதிர்த்தார். அன்று அவருடன் நிமல்கா பெர்னாண்டோ போன்றோர் அன்னையர் முன்னணியை அமைத்தார்கள். அன்று அவருடன் இருந்த வேறு சில நபர்களின் பெயர்களை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. ஏனெனில் அன்று சிங்கள இளைஞர்களை கடத்தப்பட்டு கொல்லப்பட்டதை எதிர்த்தவர்கள், பின்னாளில் எமது மக்கள் கொல்லப்பட, கடத்தப்பட காரணர்களாக அமைந்தார்கள்.

ஆனால், மங்கள அப்படி இருக்கவில்லை. 2006 முதல் 2012 வரை எமது மக்கள் மீது நடத்தப்பட்ட கொடூரமான மனித உரிமை மீறல்களையும் எதிர்த்த காரணத்தின் காரணமாகவே அவர் அன்றைய அரசில் இருந்து விலக்கப்பட்டார். 2007 ஆம் வருடம் இதே மாதிரி, ஆளும்தரப்பு பக்கமிருந்து இந்த எதிர்தரப்புக்கு வந்து அமர்ந்தார். இன்று நான் இருக்கும் இந்த ஆசனத்துக்கு அடுத்த ஆசனத்திலேயே அவர் அன்று வந்து அமர்ந்தார்.

அதன் பின் எங்களுடன் சேர்ந்து அன்று நாம் நடத்திய வெள்ளை வான் கடத்தல் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொண்டார். நிமல்கா பெர்னாண்டோ, பிரியாணி குணரத்ன, சிறிதுங்க ஜெயசூரிய, விக்கிரமபாகு கருணாரத்ன, நடராஜா ரவிராஜ் ஆகியோருடன் சேர்ந்து எங்கள் அரசு எதிர்ப்பு கூட்டங்களில் கலந்து கொண்டார்.

அது மட்டுமல்ல, சமீப காலத்தில் இந்நாட்டு முஸ்லிம் மக்களுக்கு எதிராக செய்யப்பட்ட இனவாத முன்னெடுப்புகளுக்கு எதிராகவும் செயற்பட்டார். பலாத்காரமாக ஜனாசாக்களை எரித்திடும் அரசின் செயன்முறைக்கு எதிராக எங்களுடன் சேர்ந்து குரல் எழுப்பினார்.

இந்த நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கட்சிகளிலேயே இப்படி யார் இன்று இருக்கிறார்கள்? ஆளும் தரப்பு பக்கமும் பார்க்கிறேன். எதிர்த்தரப்புப் பக்கமும் பார்க்கிறேன். யாரும் இல்லையே?

இந்நாடு சிங்கள பௌத்த நாடு அல்ல என்று சொன்னார். அதாவது சிங்களம், பௌத்தம் மட்டும் என்ற கொள்கையை அவர் எதிர்த்தார். இது சிங்கள, தமிழ், முஸ்லிம் நாடு. இது பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க நாடு. இதுவே அவரது கொள்கை. இதுவே எனதும் கொள்கை. இதைத்தான் நானும், அவரும் கலந்துரையாடுவோம்.

அதிகாரப் பகிர்வு என்றால், சிங்கள அதிகாரங்களைத் தமிழருக்கு கொடுப்பது என்பது அல்ல. கொழும்பில் குவிந்து கிடக்கும் அதிகாரங்களைப் பிரித்து எடுத்து, மாகாணங்களுக்கு, மாவட்டங்களுக்கு, ஊர்களுக்கு அனுப்புவதுதான் அதிகாரப் பகிர்வு என்ற விடயம் என அவர் புரிந்துக்கொண்டு இருந்தார். கொழும்பில் உள்ள ஒரு விசேட வகுப்பு எந்த அரசு வந்தாலும் அதிகாரங்களை பிடித்துக்கொள்கிறது. ஆகவே அந்த அதிகாரங்களை பிரித்து எடுத்து மகளுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பார். இதுவே அவரது கொள்கை. இதுவே எனதும் கொள்கை.

கடைசியாக மதம் என்பது அபின் என்ற கார்ள் மார்க்சின் கருத்தை அவர் ஆதரித்தார். மதம் என்பது அரசு என்ற நிறுவனத்தில் இருந்து பிரிக்கப்பட வேண்டும். மதம் என்பது மனிதர்களின் தனிப்பட்ட விடயம். அதை அரசு கொள்கைகளைத் தீர்மானிக்கப் பயன்படுத்தக் கூடாது என்பது அவரது கொள்கை. இதுவே எனதும் கொள்கை. இதைத்தான் நானும், அவரும் கலந்துரையாடுவோம்.

தமிழ் மக்களின் உரிமைக்களுக்காக அவர் குரல் எழுப்பினார். அவர் சாகவில்லை. அவர் எங்கள் மனங்களில் உயிர் வாழ்கிறார். அவருக்கு எங்கள் அஞ்சலிகள். அவரது சகோதரி ஜெயந்தி சமரவீர உட்படஅவரது குடும்பத்தவர்களுக்குஎங்கள் அனுதாபங்கள். - என்றார்.

# சுகாதார துறையின் வேலைநிறுத்தம் அதிலிருந்து ஒரு பிரிவினர் விலகினர்

18 தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்படும் வேலை நிறுத்த போராட்டத்தில் இருந்து அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் விலகத் தீர்மானித்துள்ளனர்.

அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய போராட்டத்தை தற்காலிகமாகக் கைவிட தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், ஏனைய தொழிற்சங்க ஊழியர்களின் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நியூசிலாந்தில் போராட்டத்தில் ஈடுபட்ட 120 பேர் கைதாகினர்





கொரோனாவில் இருந்து தப்பிக்க தடுப்பூசி ஒன்றே வழி என பல நாடுகள் கருதுகின்றன. இதனால் தடுப்பூசி கட்டாயம் செலுத்த வேண்டும் என வற்புறுத்தி வருகின்றன.

இதற்கு பெரும்பாலான மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அவர்கள் கட்டாய தடுப்பூசி என்பது தனிமனித சுதந்திரத்தை பாதிக்கிறது என கருத்து தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், நியூசிலாந்தில் கட்டாயம் தடுப்பூசிக்கு எதிர்ப்பு தெரிவித்து லொறி சாரதிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். மேலும், நியூசிலாந்தின் நாடாளுமன்ற வளாகத்தில் தடைகளை மீறி பலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் போராட்டக்காரர்கள் 120 பேரை பொலிஸார் கைது செய்தனர்

# உயர்வடைந்துவருகின்றது அமெரிக்காவின் பணவீக்கம்





1982க்கு பிறகு அமெரிக்காவில் பணவீக்கமானது கடந்த ஆண்டில் 7.5வீதம் உயர்ந்துள்ளது. பொருள்கள் மற்றும் தொழிலாளர்களின் பற்றாக்குறை, அதிக அளவிலான அமெரிக்க அரசின் நிதியுதவி, மிகக் குறைந்த வட்டி விகிதங்கள் ஆகியவை கடந்த ஆண்டில் பணவீக்கத்தை அதிகரிக்கச் செய்துள்ளன.

நுகர்வோர் விலைவாசியானது அமெரிக்காவில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 7.5 சதவீதம் உயர்ந்துள்ளது. இது 1982லிருந்து மிக அதிக உயர்வாக உள்ளது. உணவு, எரிசக்தி முதல் குடியிருப்பு வாடகை, மின்சாரம் வரை பொருளாதாரம் முழுக்க விலைவாசி ஏற்றம் காணப்படுகிறது. மாதத்திற்கு மாதம் சராசரியாக அரை சதவீதத்திற்கும் மேல் விலைவாசி உயர்ந்துள்ளதை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. அதே போல் கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவு தொழிலாளர் ஊதியங்களும் உயர்ந்து வருகின்றன. இதன் விளைவாக பல பொருள்கள் மற்றும் பாகங்களின் பற்றாக்குறை நிலவுகிறது. அடுக்குமாடி குடியிருப்பு வாடகை ஜனவரியில் மட்டும் 0.5 வீதம் உயர்ந்துள்ளது. இது 20 ஆண்டுகளில் இல்லாத அளவு வேகமான வளர்ச்சி. மின்சார கட்டணங்கள் ஜனவரியில் மட்டும் 4.2வீதம் அதிகரித்துள்ளது. ஓராண்டில் 10.7வீதம் அதிகரித்துள்ளது. இது 15 ஆண்டுகளில் இல்லாத உயர்வு. உணவு விலை ஜனவரியில் 0.9வீதம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக முட்டை, பால் பொருள்கள், தானியங்கள் விலை உயர்ந்தது இதற்கு காரணம். கடந்த மாதத்தில் வீட்டு உபயோகப் பொருள்களின் விலைவாசி 1.6வீதம் உயர்ந்தது. இது 1967க்கு பிறகு ஒரு மாதத்தில் காணப்படும் அதிகபட்ச உயர்வு. கார்களின் விலை சிப்கள் பற்றாக்குறையால் ஓராண்டில் 12.2வீதம் உயர்ந்துள்ளது. இவை அனைத்தும் அமெரிக்க பெடரல் வங்கியின் வட்டிவிகிதங்களை உயர்த்தும் முடிவுக்கு வலு சேர்க்கின்றது



# முடக்கப்பட்ட நிதியில் இருந்து ஆப்கான் மக்களுக்கு உதவிகள் வழங்குவதற்கு அமெரிக்கா முடிவு

தலிபான்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு முடக்கப்பட்ட ஆப்கானிஸ்தானின் 700 கோடி டொலர்கள் நிதியின் பாதித் தொகையை மனிதாபிமான நிவாரணத்துக்கு விடுவிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதன் மீதித் தொகையை 2001ஆம் ஆண்டு இரட்டை கோபுர தாக்குதலில் உயிரிழந்தவர்களின் நிவாரணத்துக்கும் விடுவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் ஆப்கானை தலிபான்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டபோது, அந்நாட்டின் வெளிநாட்டு நிதி முடக்கப்பட்டது.

இந்த நிதி பெரும்பாலும் அமெரிக்க வங்கிகளில் உள்ளது. முந்தைய ஆப்கான் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்துக்கான நிதி சர்வதேச சமுதாயத்திடம் இருந்துதான் கிடைத்துள்ளது.

இதன்படி, அமெரிக்க வங்கிகளில் ஆப்கான் மத்திய வங்கியின் நிதி 700 கோடி டொலர் முடக்கப்பட்டுள்ளது.

இதில் 350 கோடி டொலர் அமெரிக்காவிலேயே வைக்கப்பட்டு, இரட்டை கோபுரத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம் கோரி தலிபான்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளவர்களுக்கு நிவாரணமாக விடுவிக்கப்படவுள்ளது.

மீதமுள்ள தொகை ஆப்கனில் மனிதாபிமான உதவிகளுக்கு விடுவிக்கப்படும். இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விரைவில் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானுக்கு 900 கோடி டொலர்களுக்கு அதிகமான தொகை வங்கிகளில் உள்ளது. அமெரிக்காவைத் தவிர ஜேர்மனி, ஐக்கிய அரபு அமீரகம், சுவிஸ்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் மீதமுள்ள தொகை உள்ளது.

# வனப்பகுதியில் மறைந்திருந்த இந்தோனேஷிய குடியேறிகள் கைது



மலேசியாவின் Johor மாநிலத்தில் இருக்கும் Tenggaroh பகுதியில் உள்ள வனப்பகுதியில் மறைந்திருந்த இந்தோனேஷியாவைச் சேர்ந்த 12 ஆவணங்களற்ற குடியேறிகள் மலேசிய படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்ட அனைவரும் ஆண்கள் எனவும் அவர்கள் 19 வயது முதல் 45 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களை கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தியதில் அவர்கள் எவருக்கும் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கைதின் போது வனப்பகுதியில் பிற குடியேறிகள் விட்டுப் போன உடைமைகளைப் பரிசோதித்ததில் அதிலிருந்து போதைப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

# உக்ரைனிலிருந்து வெளியேறுமாறு பிரித்தானியா பிரஜைகளுக்கு அரசு உத்தரவு!

உக்ரைனில் உள்ள பிரித்தானிய பிரஜைகள் இப்போது நாட்டை விட்டு வெளியேறுமாறு, பிரித்தானிய அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

எந்த நேரத்திலும் ரஷ்யா, உக்ரைன் மீது படையெடுக்கலாம் என அமெரிக்கா எதிர்வு கூறியுள்ள நிலையில், அடுத்த 48 மணி நேரத்தில் தனது சொந்த குடிமக்களை வெளியேற பிரித்தானிய வெளியுறவு அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.

எல்லைக்கு அருகில் 100,000 துருப்புக்களைக் குவித்த போதிலும், உக்ரைன் மீது படையெடுப்பதற்கான எந்த திட்டமும் இல்லை என ரஷ்யா மறுத்துள்ளது. உலகத் தலைவர்களின் அழைப்பில் இணைந்துகொண்டதால், ஐரோப்பாவின் பாதுகாப்பு குறித்து அஞ்சுவதாக பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் கூறினார். எவ்வாறாயினும், கன்சர்வேடிவ் நாடாளுமன்ற உறுப்பினரும், பாதுகாப்புத் தேர்வுக் குழுவின் தலைவருமான டோபியாஸ் எல்வுட், 'அமெரிக்காவால் பயன்படுத்தப்படும் சொல்லாட்சிகள் குறித்து கவலைகளை எழுப்பிய அவர், இது இது பீதியின் எல்லை என்று அவர் கூறினார்.

நேட்டோவின் ஒரு பிரிவு பல மாதங்களுக்கு முன்பே உக்ரைனுக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

எனினும், மேற்கத்திய நாடுகள் தவறான தகவல்களை பரப்புகின்றன என ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சகம் குற்றம்சாட்டியுள்ளது.

# அழிந்துவரும் விலங்கினங்களின் பட்டியலில் கோலா கரடிகள்



ஆஸ்திரேலியாவின் கிழக்கு கரையோர பகுதியில் காணப்படும் கோலா கரடி மிருக இனம் அருகிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

குயின்ஸ்லாந்து, நியூ சவுத்வேல்ஸ் மற்றும் ஆஸ்திரேலிய தலைநகர் பிரதேசங்களில் அதிக எண்ணிக்கையில் இந்த கோலா கரடிகள் இருந்தன. காட்டுதீ, வறட்சி, நோய், காலநிலை மாற்றம் மற்றும் காடு பிரதேசங்கள் அழிக்கப்படுவதன் காரணமாக பாரிய அளவில் அருகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற காட்டு தீ காரணமாக 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோலா கரடிகள் உயிரிழந்துள்ளன என தரவுகள் தெரிவிக்கின்றன. இந்நிலை தொடருமானால் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டளவில் இந்த இனம் முற்றாக அழிந்து விடும் என ஆஸ்திரேலிய சுற்றுச் சூழல் அமைச்சர் எச்சரித்துள்ளார்.

# மேற்கு வங்காளத்தை போன்று தமிழகத்திலும் சட்டமன்றத்தை முடக்க நேரிடும் என்கிறார் எடப்பாடி



ஒரே நாடு ஒரே தேர்தல் வரும்போது மீண்டும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வருவது உறுதி என்றும், 4 ஆண்டுகள் மட்டு மல்ல எத்தனை ஆண்டுகள் ஆனாலும் தி.மு.க. சொன்னதை செய்யப் போவ தில்லை என்றும் எதிர்கட்சித் தலைவரும், அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே வேலகவுண்டனூரில் தேர்தல் பரப்புரையில் பேசிய அவர், தேர்தல் பணிகளை அதிகாரிகள், பொலிஸார் நேர்மையாக செய்ய வேண்டும். ஆளும் கட்சி என்பதால் தி.மு.க. விற்கு பயந்து அதிகாரிகள் செயல்பட கூடாது. இந்த தேர்தல் முறையாக நடத்தப்பட வேண்டும். அதற்கான நிலையை நாங்கள் ஏற்படுத்துவோம். தமிழ்நாட்டில் நேர்மையாக தேர்தலை நடத்த வேண்டும். அப்படி நேர்மையாக தேர்தலை நடத்தாவிட்டால் நாங்கள் நடத்த வைப்போம்.

பல மாநிலங்களில் பெற்றோல், டீசல் விலை குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் திமுக தனது வாக்குறுதியில் கொடுத்த பெற்றோல், டீசல் விலை குறைப்பை செய்யவில்லை. சம்பிரதாயத்திற்கு வெறும் 3 ரூபாயை மட்டும் பெற்றோலுக்கு குறைத்து உள்ளனர். தி.மு.க. தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. மக்களை தி.மு.க. ஏமாற்றிவிட்டது.

அ.தி.மு.கவை எதிர்கொள்ளும் திராணி தி.மு.கவிற்கு இல்லை. இப்போது இருக்கும் தி.மு.கவிற்கு அந்த பலம் இல்லை. தேர்தலை அறிவித்து விட்டோம். நேரடியாக மக்களை சந்தித்து வாக்கு கேட்பது தானே முதலமைச் சருக்கு அழகு. நான் முதலமைச்சராக இருக்கும் போது ஊரக உள்ளாட்சி தேர்தலில் அப்படித்தானே செய்தேன். நாங்கள் எதிர்கட்சியினரை, மக்களை அப்படித்தானே சந்தித்தோம். அந்த தெம்பு, திராணி உங்களுக்கு இல் லையே. அந்த தெம்பு இல்லாமல்தான் முறைகேடு சம்பங்களில் ஈடுபட தி.மு.கவினர் துடித்துக்கொண்டு இருக்கி றார்கள்.

தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் நடக்கும் தேர்தலில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். மேற்கு வங்காளத்தில் என்ன ஆனது என்று பார்க்க வேண்டும். மேற்கு வங்காளத்தில் கவர்னர் அங்கு சட்டசபையையே முடக்கி உள்ளார். அதே தமிழ்நாட்டிலும் இதே போல் ஆட்சியில் தவறுகள் நடந்தாலும் கவர்னர் சட்டசபையை முடக்கும் நிலை ஏற்படலாம். அதே நிலைமை இங்கே தமிழ்நாட்டிலும் எதிர்காலத்திலும் நிலவும். தி.மு.க. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஒரே நாடு ஒரே தேர்தல் வரும்போது மீண்டும் அ.தி.மு.க ஆட்சிக்கு வருவது உறுதி. 4 ஆண்டுகள் மட்டுமல்ல எத்தனை ஆண்டுகள் ஆனாலும் தி.மு.க. சொன்னதை செய்யப் போவதில்லை என்று அவர் கூறினார்.




## வெளிநாடுகளில் இருந்து தமிழகம் வருவோருக்கு கட்டாய கொரோனா பரிசோதனை கிடையாது

வெளிநாடுகளில் இருந்து தமிழகம் வருவோருக்கு இனி கட்டாய கொரோனா பரிசோதனை கிடையாது என பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

அதேவேளை, விமானங்களில் வரும் பயணிகளில் 2 சதவீதம் பேரை எழுமாறாகத் தெரிவு செய்து பரிசோதனை மேற்கொள்ளும் நடைமுறை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய விதிகள் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் அமுலாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கொரோனா வைரஸின் மூன்றாம் அலை தீவிரமடைந்த போது, மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி, வெளிநாடுகளில் இருந்து வரும் அனைவரையும் விமான நிலையத்திலேயே பரிசோதித்து தனிமைப் படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்படி, ஒமிக்ரோன் பாதிப்புள்ள நாடுகளில் இருந்து வருபவர்கள் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

பரிசோதனை முடிவுகள் வரும் வரை அவர்கள் விமான நிலையத்தில் இருந்து வெளியேற அனுமதியில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஹிஜாப் தொடர்பான வழக்கு நீதிமன்றில் நாளை விசாரணைக்கு!



கர்நாடக உயர்நீதிமன்றத்தில் ஹிஜாப் தொடர்பான வழக்கின் விசாரணை நாளை (திங்கட்கிழமை) நடைபெறவுள்ளது.

நாளைய விசாரணையைப் பொறுத்தே கல்லூரிகள் திறப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்று முதலமைச்சர் பசவராஜ் பொம்மை தெரிவித்துள்ளார்.

பத்தாம் வகுப்பு வரையிலான பாடசாலைகள் நாளை திறக்கப்படுகின்றன. எனினும் கல்லூரிகள், பல்கலைக் கழகங்களுக்கு 16ஆம் திகதி வரை விடுமுறை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே, கல்லூரிகள் திறப்பது குறித்து நீதிமன்றத்தின் கருத்தை அறிந்த பின்னரே முடிவு எடுக்கப்படும் என்று பொம்மை தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஹிஜாப் அணிந்து கல்லூரிக்கு வருவதற்கு ஆதரவாகவும் எதிராகவும் தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு மனுக்களை விசாரித்த உயர் நீதிமன்ற அமர்வு இறுதித்தீர்ப்பு வரும் வரை கல்லூரிகளுக்கு மதரீதியான ஆடைகளை அணிந்து வருவதற்கு இடைக்காலத் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் ஊரடங்கு தளர்வுகள்; முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை






தமிழகத்தில் கொரோனா பாதிப்பு கடந்த சில நாள்களாக வெகுவாகக் குறைந்து வரும் நிலையில், ஊரடங்கு தளர்வுகள் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆலோசனை நடத்தவுள்ளார். அதற்கமைய, தமிழகத்தில் ஊரடங்கு தளர்வுகள் அளிப்பது தொடர்பாக இன்று காலை 11 மணிக்கு தலைமைச் செயலகத்தில் சுகாதாரத்துறை அதிகாரிகள், மருத்துவத்துறை நிபு ணர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார். ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள ஊரடங்கு எதிர் வரும் 15ஆம் திகதியுடன் நிறைவு பெறும் நிலையில் இன்று ஆலோசனை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சுரங்கப்பாதையில் நிலச்சரிவு 9 பேர் சிக்கினர்; எழுவர் மீட்பு

மத்திய பிரதேச மாநிலத்தில் சுரங்கப்பாதை கட்டுமானத்தின் போது நிலச்சரிவில் 9 பேர் சிக்கி கொண்டனர். அவர்களில் 7 பேர் மீட்கப் பட்டனர். மற்றவர்களை மீட்கும் பணி துரிதமாக நடந்து வருகிறது.கத்னி மாவட்டத்தில் உள்ள ஸ்லீமனாபாத் பகுதியில், பர்கி கால்வாய் திட்டத்தின் கீழ் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடந்து வருகிறது. இங்கு நேற்று மாலை திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. பணியில் இருந்த 9 பேர் அதில் சிக்கி கொண்டனர். இது குறித்து அறிந்த உடன் உள்ளூர் பகுதியினர் தகவல் அளித்தனர். உடனடியாக ஜபல்பூரில் இருந்து விரைந்து வந்த மாநில பேரிடர் மீட்பு படையினர், உள்ளூர் மக்களுடன் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதுவரை 7 பேர் மீட்கப்பட்டனர். மற்றவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது.

சம்பவ இடத்தில் மாவட்ட ஆட்சியாளர் மற்றும் எஸ்.பி., ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்து மீட்பு பணிகளை பார்வையிட்டு வருகின்றனர். கூடுதல் தலைமை செயலர் , தலைமை செயலகத்தில் இருந்து கண்காணித்து வருகிறார். மாவட்ட ஆட்சியாளருடன், தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல்களை கேட்கும் முதல்வர் சிவராஜ் சிங் சவுகான், காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கும்படி உத்தரவு பிறப்பித்து உள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பட்டிருப்பில் பரீட்சார்த்திகளுக்கு பாதிப்பு: உரிய நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்து

## இலங்கை ஆசிரியர் சங்கம் பகிரங்கக் கோரிக்கை




மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களிலும் ஒரு சிரேஷ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளர்கள் இருக்கும் போது, கனிஷ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளரிடம் பரீட்சை மேற்பார்வையாளர்களை நியமிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இதனாலேயே பட்டிருப்பில் இணைந்த கணிதம் பரீட்சையின் போது குளறுபடி ஏற்பட்டது. மாணவர்களுக்கு ஏற்பட்ட இடையூறு தொடர்பில் நீதியான, பக்கச் சார்பற்ற நடுநிலையான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் பொ.உதயரூபன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில் பட்டிருப்பு கல்வி வலயத் தில் இணைந்த கணிதம் உயர்தரப் பரீட்சையின்போது இடம்பெற்ற குளறுபடி தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் அன்றையதினம் பிரதி பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, அச்சமயம் அப்பரீட்சையில் கடமையாற்றியவர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கின்றார் என நிலைமையை எமது பொதுச் செயலாளரிடம் விளக்கியிருந்தார்.

இருந்தும் இந்தப் பரீட்சை தொடர்பில் மாணவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுக்கு நீதியான, பக்கச்சார்பற்ற நடுநிலையான விசாரணையை இலங்கை ஆசிரியர் சங்கம் மீண்டும் வலியுறுத்துகின்றது.

அண்மைக் காலமாக பட்டிருப்பு கல்வி வலயத்தினுடைய கல்வி வளர்ச்சி ஒரு துரிதமான நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கடந்த முறை இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியில் மருந்துவத் துறையில் பட்டிருப்பு மகா வித்தியாலய மாணவன் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அதே வேளை கல்லாறில் 26 ஆவது நிலையில் பொறியியல் பீடத்திற்கு மாணவியொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மேலும் 52 மாணவர்கள் இணைந்த கணிதம் பாடத்திற்குத் தோற்றிய போது அதில் 50 வீதமான மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்திருந்தார்கள். மற்றும் ஏனைய பாடங்கள் தொடர்பிலும் பட்டிருப்பின் கல்வி வளர்ச்சி மிக உயர்வாகக் காணப்பட்டதோடு 50 வீதமான மாணவர்கள் சகல துறைகளிலும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று வலயத்திற்குப் பெருமையைச் சேர்த்திருக்கின்றார்கள். அத்துடன் கடந்த உயர்தரத்தில் வர்த்தகத்துறையில் மாவட்டத்தின் ஐந்து வலயங்களிலும் முதலாவது இடத்தை பட்டிருப்பு வலயம் பெற்றிருக்கின்றது.

இவ்வாறு இருக்கையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றருக்கின்றது. அதற்கு பரீட்சை மேற்பார்வையாளர்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தியிருக்கின்ற போதும், இந்த மேற்பார்வையாளர்களை யார் நியமித்தனர் என்பது தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதற்கு பரீட்சைகள் ஆணையாளர் பொறுப்புக் கூற வேண்டும்.

ஏனெனில் மட்டக்களப்பு கல்வி வலயத்தில் இருந்து பெரும்பாலான அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்த வருடம் கடமைப் பொறுப்புகள் கையளிக்கப்படவில்லை. பரீட்சை தொடர்பில் நீண்ட காலம் அனுபவத்துடன் மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு, புதிதாக நியமனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்.

மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களிலும் ஒரு சிரேஷ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளர்கள் இருக்கும் போது கனிஷ்ட தரத்தில் இருக்கின்ற கல்விப் பணிப்பாளரிடம் பரீட்சை மேற்பார்வை-யாளர்களை நியமிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

அதேநேரம் பரீட்சை மேற்பார்வைக் கடமைகளில் முழு நேரமாக ஈடுபட வேண்டியவர்களுக்கு நேற்றைய தினம் பரீட்சை பகுப்பாய்வு என்று சொல்லி மட்டக்களப்பு கல்வி வலயத்தில் நடத்துகின்றார்கள். இது தொடர்பில் நேரடியாக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமும், பிரதிப் பரீட்சை ஆணையாளரிடமும் தெரிவித்திருந்தோம். முழு நேரமும் பரீட்சைக் கடமையில் ஈடுபட வேண்டியவர் சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்யும் கடமையில் எவ்வாறு ஈடுபட முடியும்?

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்வது மட்டுமல்லாமல் பாதிக்கப்பட்ட இந்த மாணவர்களுக்குப் பொருத்தமான நடவடிக்கையை பரீட்சைகள் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் நாங்கள் பரீட்சைகள் பிரதி ஆணையாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்விச் செயலாளர் ஆகியோரிடம் தெரிவித்திருக்கின்றோம். மேலும் மாகாண ஆளுநருடனும் கலந்துரையாடவுள்ளோம். – என்று தெரிவித்தார்.

# உள்ளூர் வளர்ச்சி ஆதரவுத் திட்டத்தில் கல்முனை முற்றாக புறக்கணிப்பு ஏன்?

## நீதி கோருகிறார் மாநகர சபை உறுப்பினர் அப்துல் மனாப்

(நூருல் ஹுதா உமர்)



மாகாண சபையினால் உள்ளூராட்சி மன்றங்களை பலப்படுத்தும் நோக்கில் அறிமுகம் செய்யப்பட்ட உள்ளூர் வளர்ச்சி ஆதரவுத் திட்டத்தில் (Local Development Support Project - LDSP) கல்முனை முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. திட்டமிடலின் போது உள்வாங்கப்பட்ட கல்முனை, திட்டம் அமுல்படுத்தப்பட்டபோது புறக்கணிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் தலையிடுமாறு பிரதிமுதல்வர் ரஹ்மத் மன்சூர் உட்பட மாநகரத்தை ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சகல உறுப்பினர்களிடமும் தனிப் பட்ட முறையிலும் பேசினேன். எல்லோரும் மௌனமாக இருக்கிறார்கள். மாநகரசபையினால் வரி அறவிடுவதில் மட்டுமே கல்முனைக்கு முன்னுரிமையளிக்கப்படுகிறது. அபிவிருத்தி சார்ந்த எல்லா விடயங்களிலும் கல்முனை புறக்கணிக்கப்படுவது வருத்த மளிக்கிறது என கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.எச்.எம். அப்துல் மனாப் தெரிவித்தார்.

இன்று அவரது காரியாலயத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து பேசிய அவர் அப்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

கல்முனை மாநகரசபையினால் திட்டத்தின் ஆரம்பத்தில் சாய்ந்தமருத்துக்கு பாலமொன்றும் மருதமுனை மற்றும் கல்முனைக்கு தலா ஒரு கலாச்சார மண்டபமும் தமிழ் மக்களுக்கான ஒதுக்கீட்டில் வீதி அபிவிருத்திக்கும் என கலந்துரையாடல்கள் நடைபெற்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் சாய்ந்தமருது, மருதமுனை ஆகிய பிரதேசங் களின் முதல்கட்ட வேலைத் திட்டம் ஆரம்பமாகியுள்ள நிலையில் கல்முனை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பிரதேச மக்களின் ஒன்றுகூடல்கள், நிகழ்வுகளை நடத்த வாசிகசாலை மண்டபம், மக்கள் மண்டபம் என்றும் இன்னோரென்ன பெயர் களிலும் பொது மற்றும் தனியார் மண்டபங்கள் பல்வேறு இடங்களில் உள்ளன. ஆனால் கல்முனையில் ஆபத்திற்கு ஒதுங்கக் கூட ஓர் இடமில்லை என்பதை எல்லோரும் அறிவர். இறுதியாக பிரதேச செயலக நில ஒதுக்கீட்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அது மருதமுனைக்கு கைநழுவி போகியுள்ளது. 2021 இல் மீண்டும் அந்த திட்டம் அமுல்படுத்தப்பட்டபோதும் கல்முனை புறக்கணிக்கப்பட்டுள்ளது. கல்முனை மாநகரில் கலாச்சார மண்டபமொன்றை கட்ட கல்முனையை சேர்ந்த சகல மாநகரசபை உறுப் பினர்களும் கலந்துரையாடி கிரீன்பீல்ட் பிரதேசத்தில் அமைக்கத் திட்ட மிட்டோம்.

அந்த திட்டங்களில் தொடர்ச்சியாக கல்முனை புறக்கணிக்கப்பட்டு வருவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது.

இது தொடர்பில் கடந்த 2021 டிசம்பர் மாத மாநகரசபை அமர்வில் கேள்வியெழுப்பினேன். 2022 இல் கல்முனைக்கும் கிடைக்க நடவடிக்கை எடுப்பதாக கூறப்பட்டது.

ஆனால் இப்போது ஏனைய மூன்று ஊர்களுக்கும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் நடக்கின்றன. கல்முனையில் எதுவும் நடக்க வில்லை. மீண்டும் புறக்கணிக்கப் படுகிறது. இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி கல்முனைக்கு நீதி பெற்றுத்தர முன்வர வேண்டும். – என்றார்.



# நாடு தழுவிய தனிநபர் சைக்கிளோட்டம் பொத்துவிலின் சுல்பிகார் தொடங்கினார்

(நூருல் ஹுதா உமர்)

74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை வலியுறுத்தி, நாடு முழுவதும் தனிநபராக 1,407 கிலோ மீற்றர் சைக்கிள் சவாரியை பொத்துவிலைச் சேர்ந்த சுல்பிகார் நேற்று சனிக்கிழமை காலை கொழும்பு சுதந்திர சதுக்கத்திலிருந்து சர்வமதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பித்தார்

இந்த சைக்கிள் சவாரி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, கல்முனை, பொத்துவில், ஹம்பாந்தோட்டை ஊடாக கொழும்பை வந்தடையும். இந்த ஆரம்ப நிகழ்வின் பிரதம அதிதியாக ஜே.ஜே. பௌண்டேசன் தலைவர் டாக்டர் எம்.வை.எம். அனீப் கலந்து கொண்டார். சிறப்பதிகளாக ஸ்ரீலங்கா உலமா கவுன்ஸில் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத், கவிஞர் பொத்துவில் அஸ்மின், சிரேஷ்ட ஊடக வியலாளர் எம்.எஸ்.எம் இர்பான், பொத்துவில் பிரதேசசபை உறுப்பினர் அப்துல் மஜீத், உல்லாச பயணத் துறை தலைவர் ஜபர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்

# ஒருங்கிணைப்புக்கு மேலதிகமாக திட்டங்கள் மேற்கொள்ள தயார்!

## இராணுவத் தளபதி உத்தரவாதம்




சேதன பசளை உற்பத்திச் செயற்பாடுகளின் ஒருங்கிணைப்புக்கு மேலதிகமாக அது தொடர்பிலான விழிப்புணர்வுசெயற்பாடுகளை முன்னெடுக்கும் இயலுமை இராணுவத்திற்கு உள்ளது. மேலும் இயலாதவையென ஒன்றுமில்லை என்பதால் உற்பத்திக்கு அவசியமான அடிப்படை வசதிகள் மற்றும் மூலப்பொருள்களை உற்பத்தி செய்து போக்குவரத்துச் செய்வதில் சிக்கல்கள் இருப்பின் அவற்றை நிவர்த்திக்கும் இயலுமையும் இராணுவத்திடம் உள்ளதென பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியும் பசுமை விவசாய செயல்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா பசுமை விவசாய செயல்பாட்டு மையத்தின் கூட்டத்தில் தெரிவித்தார்.

சிறுபோக உற்பத்தியை இலக்காகக் கொண்டு இராணுவம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை மேற்கொண்டுள்ளதோடு, அதற்கான கலந்துரையாடல்கள் மாவட்ட செயலகங்கள், விவசாய துறைசார் நிபுணர்களுடனும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், இதன்போது விவசாய சமூகங்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்த போது அவர்கள் தரை மட்டத்திலான தொடர்ச்சியான விழிப்பு ணர்வுச் செயற்பாடுகளின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தனர் எனவும் தெரிவித்தார்.

அதனால் அதற்காக இராணுவம் ஒத்துழைப்பு வழங்கத் தயார் நிலையில் உள்ளதுடன் மாவட்ட மட்டத்தில் லக்பொஹொர உர நிறுவனம், உர செயலகம் ஆகியவற்றுடன் இணைந்து கண்காணிப்பு பணிகளையும் மேற்கொள்ள முடியுமென ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாய இராஜாங்க அமைச்சர் சஷேந்திர ராஜபக்ஷ, விவசாய அமைச்சின் செயலாளர் டி.எம்.எல்.டி. பண்டாரநாயக்க, தீர்மானம் எடுக்கும் அதிகாரமுள்ள அரசாங்க அதிகாரிகள், மாவட்ட மட்டத்திலான பங்குதாரர்களும் சூம் தொழில்நுட்பத்தின் உதவியோடு அமர்வில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாய அமைச்சின் செயலாளர் டி.எம்.எல்.டி பண்டாரநாயக்கவால் நன்றியுரைநிகழ்த்தப்பட்டதைதொடர்ந்து இந்தக் கூட்டத்தின் நோக்கம் மற்றும் மாவட்ட மட்ட பிரதிநிதிகளுடனான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் என்பன தொடர்பில் விளக்கமளித்தார்.

அத்தோடு, விவசாய இராஜாங்க அமைச்சு தேசிய அளவில் சேதன பசளை விநியோகத்தை ஆரம்பித்துள்ள நிலையில், பெரும்போகத்தின் போது ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல்களை நிவர்த்திப்பதற்கான தீர்மானங்கள் தொடர்பில் ஆராயப்படுகின்றன எனவும் தெரிவித்தார். மேலும் விவசாய அமைச்சின் செயலாளர், பசுமை விவசாயக் திட்டத்தின் வெற்றிக்கு அனைத்து பொறுப்புள்ள தரப்புக்களும் தங்களின் சிறந்த ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

அதேநேரம் பசுமை விவசாய செயற்பாட்டுமையத்தின் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் மாவட்ட மட்டத்திலான சேதன பசளை உற்பத்திகள் மேற்கொள்ளப்பட உள்ளனவென தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சஷேந்திரா பக்ஷ, இந்தக் குழுவில், மாவட்ட செயலாளர்கள், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், பசுமை விவசாய செயற்பாட்டு மையத்தின் பிரதிநிதிகள் ஆகியோரும் அடங்குவர். உர உற்பத்தி, அளவு, போக்குவரத்து, சேமிப்பு, விவசாயிகளுக்கு விநியோகம் ஆகிய முழுப் பொறுப்பு, மற்றும் அதன் பயன்பாடு அந்தந்த மாவட்ட குழுக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேஜர் ஜெனரல் இந்து சமரகோன், இராணுவ ஒருங்கிணைப்பு மற்றும் இராணுவ வழங்கல் தளபதி பிரிகேடியர் சந்தன அரங்கல்ல, பசுமை விவசாய செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர்கள் மற்றும் பல அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு விசா அனுமதி வழங்க நடவடிக்கை!

இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு, 'வருகையின் பின்னரான விசா' அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கொரோனாத் தொற்றுப் பரவல் குறைவடைந்து வருகின்ற நிலையில், இலங்கையின் சுற்றுலாத் துறையை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் மிகப்பெரிய சுற்றுலா சந்தையாக இந்தியா உள்ளதென்றும் கடந்த ஆண்டு இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டவர்களுள் 42 சதவீதமானோர் இந்திய சுற்றுலாப் பயணிகளே என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில், இந்திய சுற்றுலாப்பயணிகள், இலங்கைக்கு வந்ததன் பின்னர், தங்களது விசா அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

# பெப்ரவரி மாதத்தின் முதல் 10 நாள்களில் 30 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை!

பெப்ரவரி மாதத்தின் முதல் 10 நாள்களில் இலங்கையின் சுற்றுலாப் பயணிகளின் வருகை 30 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தற்காலிகத் தரவுகளின்படி, பெப்ரவரி முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை 31 ஆயிரத்து 343 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, பெப்ரவரி மாதத்துக்கான வருகை விகிதம் நாளாந்தம் 3 ஆயிரத்து134ஆகக்காணப்படுவதாகவும் அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

மேலும் ரஷ்யாவில் இருந்தே 4 ஆயிரத்து 566 பார்வையாளர்கள் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், 3 ஆயிரத்து 799 பயணிகளின் வருகையுடன் இங்கிலாந்து இரண்டாவது இடத்திலும் 3 ஆயிரத்து 575 பயணிகளுடன் இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளதாக அந்தச் சபை தெரிவித்துள்ளது.

# சஹ்ரான் ஹாசீமின் படங்களை வைத்திருந்தவர் விசாரணையின் பின்னர் விடுதலையானார்



வாழைச்சேனையில் வபன் ஒன்றில் பிரயாணித்த ஒருவரின் கையடக்கத் தொலைபேசியில் சஹ்ரான் ஹாசீமின் படங்கள் காணப்பட்டமையைடுத்து, தடுத்து வைக்கப்பட்ட 9 பேரும் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனையில் வான் ஒன்றில் பிரயாணித்த ஒருவர் கையடக்க தொலைபேசியில் சஹ்ரான் ஹாசீமின் படங்களை வைத்திருந்தமையை அடுத்து 9 பேர் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் உள்ள ரிதிதென்னை பொலிஸ் சோதனைச் சாவடியில் சனிக்கிழமை காலை அக்குரனையில் இருந்து காத்தான்குடி நோக்கி பயணித்த வாகனம் ஒன்றை நிறுத்தி இராணுவத்தினர் சோதனையிட்டனர்.

இதன்போதே, முகமட்பாரூக் முகமட் ஆசாத் என்பவர் தனது கையடக்க தொலைபேசியில் தடுப்பூசி ஏற்றியதற்கான அட்டையின் படத்தை காட்ட முற்பட்டபோது, ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதியான சஹ்ரான் ஹாசீமின் படங்களை வைத்திருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, அந்த வாகனத்தில் பயணித்த 9 பேரையும் தடுத்து நிறுத்திய பொலிஸார் அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அதன்பின் அவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர்.

# நேற்றுதிடீரெனசெயலிழந்த மின் உற்பத்தி நிலையங்கள்

நேற்று (சனிக்கிழமை) பிற்பகல் முதல் பல பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மின் கட்டமைப்பில் சுமார் 400 மெகாவாட் மின்சாரம் இழப்பு ஏற்பட்டமையே மின் தடைக்குக் காரணம் எனத்தெரிவிக்கப்படுகிறது. களனிதிஸ்ஸமற்றும்கெரவலப்பிட்டிய அனல் மின் நிலையங்களில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தைத் திருத்த ஏற்பாடு

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அயகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைச்சரவையும் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிறுவனங்களுக்குச் சொந்தமான விவசாயம் செய்யப்படாத காணிகளை சுவீகரித்து மீண்டும் பயிர்ச்செய்கைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# போதை மாத்திரைகளுடன் ஒருவர் மல்லாகத்தில் கைது!

நேற்று (சனிக்கிழமை) இரவு 7.30 மணியளவில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் விசேட சுற்றிவளைப்பில், பெருமளவான போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சாவகச்சேரி பகுதியை சேர்ந்த குறித்த சந்தேகநபர் திருமணம் முடித்து மல்லாகம் பகுதியில் வசித்துவந்துள்ளார்.

இந்நிலையில் மல்லாகத்தில் உள்ள வீடு ஒன்றில்வைத்து 265 போதை மாத்திரைகளுடன், இராணுவ புலனாய்வு பிரிவினர் அவரைக் கைது செய்து தெல்லிப்பழை பொலிஸாரிடம் கையளித்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.02.2022இல் வெளியிடப்பெற்றது.